பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி19 திங்கட்கிழமை 04.08.2025 கதிர் 268

**இனி இது ரகசியம் அல்ல!**

யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை நடந்ததமிழ்அரசுக்கட்சியின்அரசியல் குழு, அரசியல் தீர்வு விவகாரம் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழு, நாடாளுமன்றக் குழு ☞ 2

செம்மணி மனிதப் புதைகுழி குறித்த

# சர்வதேச விசாரணையில் சாட்சியமளிப்பதற்கு தயார்

## கிருஷாந்தி கொலை வழக்கு குற்றவாளி சோமரத்ன அறிவிப்பு

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப்புதைகுழிகள் தொடர்பில் சர்வதேச விசாரணைமுன்னெடுக்கப்படும்பட்சத்தில்அதில் சாட்சியமளிப்பதற்குத்தயாராக இருக்கின்றேன் என்று கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில்பிரதானகுற்றவாளியாகநீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்ட லான்ஸ்கோப்ரல்சோமரத்ன ராஜபக்சதெரிவித்திருக்கிறார் என்று குறிப்பிட்டு அவரின் மனைவி விஜயவிக்ரம ஜனாதிபதி அநுரகுமாரதிஸநாயக்கவுக்குக்கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அத்துடன், 7ஆம்காலணிஇராணுவப்படை தலைமையகத்தில் கொலை செய்யப்பட்டு செம்மணி சோதனைச் சாவடிக்குக் கொண்டுவரப்பட்ட கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் அவரின் குடும்பத்தாரின் ☞ 2

## 130 எலும்புக்கூடுகள்

### நேற்றும் புதிதாக 4 அடையாளம்



யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் தற்போது தோண்டப்பட்டு வரும் செம்மணி சிந்துப்பாத்தி மயானத்தில் நேற்று வரையில்130எலும்புக்கூடுகள்,மனிதஎச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ☞ 3

# சர்வதேச விசாரணைக்கு அநுர உடன்படவேண்டும்

## மனோ கணேசன் வலியுறுத்து

செம்மணிபடுகொலைவழக்கில்சர்வதேச கண்காணிப்பு, விசாரணைக்கு ஜனாதிபதி அநுர உடன்படவேண்டும். அதற்கு முன்னர் சிறையில் இருக்கும் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவுக்கு உடனடியாக அதியுயர் விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்றுவலியுறுத்தியுள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை குற்றவாளி லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவின்மனைவிதிருமதிவிஜயவிக்கிரம, ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதன் நகல்களை பிரதமர் ஹரிணிஅமரசூரியவுக்கும்அனுப்பியுள்ளார். ஐ. நாவுக்கும் அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் தனது கணவர் தன்னிடம் கூறிய விடயங்களை,அவர்எழுதியுள்ளார்.ஆகவே, இன்று இந்தக் கடிதம், அநுரகுமார திஸநாயக்கவின் 'கோர்ட்டில்'சர்வதேச ☞ 2

# சோமரத்னவை தமிழ்த் தரப்புகள் சரியாகப் பயன்படுத்தவேண்டும்

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்து

கிருஷாந்தி குமாரசுவாமி கொலை வழக்கில் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவின் கருத்து தமக்கு அதிஷ்டலாபச்சீட்டு விழுந்ததைப்போன்று இருப்பதாகத் தெரிவித்துள்ள வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், சர்வதேச விசாரணைமுன்னெடுக்கப்படுவதற்குஅவசியமான அழுத்தத்தை வழங்குவதற்கு பாதிக்கப்பட்ட தரப்பினர், தமிழ்த் தேசிய அரசியல் ☞ 2

செம்மணி விவகாரத்தில்

# சர்வதேசத்திற்குச் செல்லவதற்குமுன் தேசிய நீதிக் கட்டமைப்பை நாடலாம்

## சரத் வீரசேகர கருத்து

செம்மணி விவகாரத்தை சர்வதேசத்துக்கு கொண்டுசெல்வதற்கு முன்னர் தேசிய நீதிக் கட்டமைப்பை நாடலாம் என்றும், கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கின் பிரதான குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ச சர்வதேச விசாரணைக்கு ஒத்துழைக்கத்தயார்என்றுகூறியிருப்பது தொடர்பில் அரசுத் தலைவர் எடுக்கும் நடவடிக்கைஎன்னவென்பதைக்காணக் காத்திருக்கின்றோம்என்றும்முன்னாள் பொதுமக்கள்பாதுகாப்புஅமைச்சர் ☞ 3

# இனரீதியில் பிரதேச நிர்வாகம் ஒருபோதும் அமையாது என ஆளும்தரப்பு உறுதிமொழி

## கல்முனை வடக்கு விவகாரத்தில் நிசாம் காரியப்பர் தெரிவிப்பு

பிரதேச நிர்வாகங்கள் ஒருபோதும் இன அடிப்படையில் அமைக்கப்பட மாட்டாது என்ற உத்தரவாதம் ஆளும்தரப்பால் தனக்கு வழங்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும்.நாடாளுமன்ற உறுப்பினருமான அரசுத் தலைவர் சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

கல்முனை உப பிரதேச செயலக விவகாரம் தொடர்பாக அம்பாறை, ஒலுவில் விடுதியில் சனிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான உதுமான்லெப்பை, தாஹிர் அஷ்ரப் மற்றும் அப்துல் வாசித் உள்ளிட்டோரும் கல்முனை அனைத்துப் பள்ளிவாசல்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இக்கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதேச செயலகங்களோ அல்லது பிரதேச சபைகளோஇனஅடிப்படையில்அமைக்கப்பட ☞ 3

# நீதிக்கான பயணத்தில் செம்மணி புதிய கதவுகளைத் திறந்துவிடும்

## சட்டத்தரணி இரத்தினவேல் தெரிவிப்பு

செம்மணி மனிதப் புதைகுழி நிச்சயமாக மிகவும் முக்கியமானது. நீதிக்கான பயணத்தில் செம்மணி மனித புதைகுழி புதிய கதவுகளை திறந்துவிடும்.செம்மணிக்கொலைகளை இராணுவத்தினரே செய்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன என்று தெரிவித்துள்ளார் மனித உரிமைகள் தொடர்பில் நீண்ட காலமாகச் செயற்பட்டு வருபவரான மூத்த சட்டத்தரணி இரத்தினவேல் கடந்தகால ஆளும்தரப்புக்களை போலவேதற்போதைய ஆளும்தரப்பும் செயற்படுகின்றது என்று தெரிவித்தார்.

கொழும்பு தமிழ் சங்கத்தில் இடம்பெற்ற 'வன்மம்' கிருஷாந்தி ☞ 2

# புலம்பெயர்ந்தோர் தமிழ் அமைப்புக்களை திருப்திப்படுத்தவே மகிந்தவுக் நெருக்கடி

## திலும் அமுனுகம எம்.பி. தெரிவிப்பு

பிரிவினைவாத கொள்கையுடைய புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை திருப்திப்படுத்தவே மஹிந்த ராஜபக்சவை நெருக்கடிக்குள்ளாக்க ஆளும்தரப்பு முயற்சி. உத்தியோகபூர்வ ☞ 3

# நல்லூரில் பிரதமர்



யாழ்ப்பாணம்வருகைதந்திருந்த பிரதமர் ஹரினி நேற்று நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பலத்த பாதுகாப்பிற்குமத்தியில்வழிபாடுகளில் ஈடுபட்டார்.

கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக விழிப்புணர்வுக் கூட்டங்களை மாவட்டம் தோறும் நடத்தி ☞ 3

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஆகியவற்றின்கூட்டம்நடந்ததுவாசகர்களுக்குத் தெரியும். அந்தக் கூட்டம் இணக்கமாகவும் சுமுகமாகவும் பிணக்குகள் இன்றியும் நடந்து முடிந்தது என்று பரவலாகச் சொல்லப்பட்டது. கட்சிக்குள் சுமந்திரன், சிறீதரன் என்று இரு அணியினர் இருக்கின்ற நிலையில் பிரச்சினைகள் இன்றிக் கூட்டம் சுமுகமாக நடந்தால் அதுவே செய்திதான்.

இருந்தாலும் இந்த இரு அணியினருக்கும் இடையிலான சலசலப்புக்களும் கூட்டத்தில் இல்லாமலில்லை. கட்சித் தலைவர் சிவஞானத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் எழுதிய 7 கடிதங்கள் கூட்டத்தில் வாசிக்கப்பட்டன. பெரும்பாலான கடிதங்கள் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைக்கப்பட்டபோது கட்சித் தலைமையினன் சொல்லுக் கேட்கமாட்டோம் என்று அழிச்சாட்டியம் பண்ணியவர்களினால் எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்களே முறைப்பாடுகளாக எழுதப்பட்டிருந்தன. கட்சித் தலைவர் அந்தக் கடிதங்களை வாசித்து அதில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளித்தார். பெரும்பாலானவை குற்றச்சாட்டுக்களே இல்லை என்பதாக அவரது பதில் அமைந்திருந்தது.

இவ்வாறு சிறீதரன் எழுதிய கடிதத்தில் ஒன்று வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினரால் யாழ். நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கில் இணைக்கப்பட்ட விவகாரமும் அங்கு எழுந்தது. தலைவருக்குத் தான் எழுதிய கடிதத்தின் பிரதியை தானே அந்த உறுப்பினருக்கு அனுப்பி வைத்திருந்தார் என்பதையும் சிறீதரன் அங்கு ஏற்றுக்கொண்டார். அந்தளவோடு அந்தப் பிரச்சினை நிறுத்தப்பட்டது. வழக்கைத் தாங்கள் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்வதாகச் செயலாளர் சுமந்திரன் பதிலளித்தார்.

கடைசியில் சிறீதரனின் கடிதம் ஒன்று தன் மீது கட்சி உறுப்பினர்கள் அவதூறு பரப்பும் விதத்தில் பேசி வருகின்றனர் என்ற குற்றச்சாட்டாக இருந்தது. சுமந்திரன் மற்றும் சாணக்கியனை நோக்கியதாகத்தான் அந்தக் குற்றச்சாட்டு இருந்தது. சாணக்கியன் உடல்நலக் குறைவு காரணமாக சனிக்கிழமை கூட்டத்திற்கு வந்திருக்கவில்லை. ஆனாலும் சுமந்திரன் அந்தக் குற்றச்சாட்டிற்குப் பதிலளித்தார். தான் ஒருபோதும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் பெயர் குறிப்பிட்டு எந்தவொரு குற்றச்சாட்டையும் தெரிவிக்கவில்லை என்று கூறினார். அதற்கு இல்லை என்று சிறீதரன் ஏதோ பதிலளிக்க முற்பட்டார். அப்படித் தான் சிறீதரனின் பெயர் குறிப்பிட்டிருந்தால் அது எங்கே, எப்போது, எச்சந்தர்ப்பத்தில் என்று கூறும்படி சுமந்திரன் சவால்விட்டார். சிறீதரனால் அப்படியெதனையும் கூறமுடியவில்லை.

அரசியல் லஞ்சமாக மதுபான சாலைகளுக்குரிய அனுமதிப் பத்திரங்களை ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து பெற்றது தொடர்பான குற்றச்சாட்டில்கூட தான் தமிழ் மக்கள் கூட்டணித் தலைவர் விக்னேஸ்வரனையும் தமது கட்சியின் மன்னார் மாவட்டத் தலைவர் சார்ள்ஸ் நிர்மலநாதனையும் மட்டுமே பெயர் சுட்டிப் பேசியிருக்கிறார் என்றும் அவர்கள் அந்தக் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர் என்றும் அவர்கள் தவிர வேறு யாரையும் அதுவிடயத்தில் தான் பெயர் சுட்டிப் பேசியதில்லை என்றும் சுமந்திரன் அடித்துச் சொன்னார். அதற்குச் சொல்லக்கூடியதாகப் பதிலேதும் சிறீதரனிடம் இருக்கவில்லை. மௌனமாகவே இருந்தார். ஒருவேளை, "நானாகத்தான் தொப்பியைத் தலையில் தூக்கிப்போட்டுக்கொண்டுவிட்டேனோ" என்று எண்ணிக் கொண்டிருப்பாரோ தெரியாது.

கூட்டத்தில் மற்றொரு விடயமும் முக்கியமாக ஆராயப்பட்டது. செம்மணிப் புதைகுழி போன்ற விவகாரங்கள் முக்கியத்துவம் பெற்றுவரும் நிலையில், ஐ.நா. போன்ற நிறுவனங்களுடனும் ஏனைய இராஜதந்திரிகளுடனும் பேசும்போது கட்சி சார்பில் தனியொருவர் பேசச் செல்லக்கூடாது, ஒரு குழுவாகச் செல்லவேண்டும் என்ற கோரிக்கை சிறீதரன் தரப்பிலிருந்து வைக்கப்பட்டது. இதுபோன்ற விடயங்களில் ஆளும்தரப்பின் தேவைகளுக்கு ஏற்ப சுமந்திரன் செயற்படுகின்றார் அல்லது செயற்பட்டுவிடுவார் என்று கட்சிக்கு வெளியே கஜேந்திரகுமார் போன்றவர்களும் சில சிவில் அமைப்புக்கள் மற்றும் சில பத்தி எழுத்தாளர்களும் கூறி வருவதன் எதிரொலியாகவும் இந்த விடயத்தைப் பார்க்கலாம். எப்படியிருந்தாலும் கூட்டத்தில் இருந்த பலருக்கும் இது ஒரு நியாயமான கருத்தாகவேபட்டது.

ஆனால், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அப்படிக் குழுவாகச் சென்று விடயங்களைக் கையாள முடியாத நிலைமைகள் இருப்பதாக சுமந்திரன் அங்கு விளக்கமளித்தார். சில இடங்களிலிருந்து தனிப்படச் சந்திப்புக்கு வரும்படி அழைப்பு விடுக்கப்படும்போது, மற்றைவர்களையும் கூட அழைத்துச் செல்ல முடியாத நிலமை இருக்கும், மீறி அழைத்துச்சென்றால் சந்திப்பில் உரியவர்கள் மனம்விட்டுப் பேசி சரியான நிலமைகளைப் புரியவைக்காமலேயே விட்டுவிடுவார்கள் என்பதுபோன்ற காரணங்களை அவர் முன்வைத்தார். சில சந்திப்புக்கள் அவசர அவசரமாக நிகழ வேண்டியிருப்பதனால் அவற்றுக்கும் குழுவை அழைத்துச் சாத்தியமற்றதாக இருக்கும் என்றும் அவர் விளக்கப்படுத்தினார். அவர் சொல்வதிலும் நியாயம் இருப்பதாகவே அங்கிருந்த பலருக்கும் தோன்றியது.

இருந்தாலும் இந்த விடயத்தில் கட்சிரீதியான தீர்மானம் என்று எதுவும் எடுக்கப்படவில்லை.

இப்படித்தான் தமிழ் அரசுக் கட்சியின் கூட்டம் சுமுகமாக முடிந்தது

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சர்வதேச....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணிப்பு விசாரணைக்கு ஜனாதிபதி அநுர உடன்படவேண்டும்.

அதிலே, லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச சுதந்திரமாக சாட்சியம் அளிக்க வேண்டும். ஆனால், இவற்றுக்கு முன், இன்று சிறையில் இருக்கும் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவுக்கு, உடனடியாக அங்கே அதியுயர் விசேட பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். இது தொடர்பில், அரசியல் சிவில் சமூகமாக நாம் கூட்டு மேல் நடவடிக்கைக்கு தயாராவோம். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் வோல்கர் டர்க் கிடம் நாம் அதிகாரபூர்வமாக கோரிக்கை விடுப்போம். பிரசித்தி பெற்ற சித்திர வதை, பாலியல் வல்லுறவு, படுகொலை வழக்கில் தண்டனை பெற்ற குற்றவாளி லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச, தனக்கு ஆணையிட்ட மேலதிகாரிகளை அடையாளம் காட்டத் தயார் என்கிறார்.

இலங்கை வரலாற்றில் இப்படியோர் இராணுவத்தைச் சேர்ந்த நபர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்து, தனக்கு ஆணை இட்ட மேலதிகாரிகளை அடையாளம் காட்டத் தயார் என்று கூறவில்லை. ஆகவே, இதை ஏற்று மேல் நடவடிக்கை எடுக்க அநுரகுமார ஆளும்தரப்பு முன் வரவேண்டும். சர்வதேச நெருக்குதல்களை முறையாகத் தர ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகமும் முன்வர வேண்டும். இதைச் செய்ய முடியாவிட்டால், இது ஓர் ஆளும்தரப்பாகவோ அது ஓர் ஐ.நா. சபையாகவோ இருக்க முடியாது. இது இன்று சர்வதேச விவகாரம் ஆகி விட்டதை அநுரகுமாரவும் வோல்கர் டர்க்கும் உணரவேண்டும்.

அதனால்தான், அநுரவுக்கு செம்மணி விவகாரம் ஓர் அக்கினிப் பரீட்சை என்று அன்றே சொன்னேன். இன்று மீண்டும் கூறுகிறேன்.' - என்றுள்ளது. நுவரெலியா

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவிலுள்ள கிவ் தோட்ட கீழ்ப் பிரிவில் கழிவுநீர் குழியில் விழுந்து 8 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சிறுவனின் சடலம் மீட்கப்பட்டு டிக் கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சோமரத்னவை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகள், சிவில் சமூகம், புலம்பெயர் தமிழர்கள் என சகல தரப்பினரும் இச்சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

யாழ். செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப்படும் பட்சத்தில், அதில் சாட்சியமளிப்பதற்குத் தயாராக இருக்கின்றார் என்று கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச தெரிவித்திருப்பதாகக் குறிப்பிட்டு அவரது மனைவி அரசுத் தலைவர் அநுரகுமாரவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அத்தோடு போர்க் காலத்தில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் அங்கு நடாத்தப்பட்டுவந்த சித்திரவதைக்கூடங்கள் என்பன பற்றிய விவரங்களையும் வெளியிடுவதற்குத் தனது கணவர் தயாராக இருக்கிறார் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் சோமரத்ன ராஜபக்சவின் வெளிப்படுத்தல்கள் தமக்கு அதிஷ்டலாபச்சீட்டு விழுந்ததைப்போன்று இருப்பதாகவும், இச்சந்தர்ப்பத்தைத் நீதிகோரிப்போராடும் சகல தரப்பினரும் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் எனவும் வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி தெரிவித்தார்.

சோமரத்ன ராஜபக்சவின் கருத்து எமக்குச் சாதகமாக அமைந்திருக்கிறது. இதனைப் பாதிக்கப்பட்ட தரப்பினரும், தமிழ்த் தேசிய அரசியல் பிரதிநிதிகளும், சிவில் சமூக அமைப்புக்களும், புலம்பெயர் தமிழர்களும் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். இதுபற்றி சர்வதேச நாடுகளின் இராஜதந்திரிகளிடம் எடுத்துரைப்பதுடன் சர்வதேச நீதி விசாரணைக்குப் பரிந்துரைக்குமாறு அவர்களிடம் கோரவேண்டும். ஏனெனில் ஆளும்தரப்பு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேச விசாரணையை நோக்கிச் செல்லப்போவதில்லை.

ஆகவே இவ்விடயத்தில் சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப்படுவதற்கு அவசியமான அழுத்தத்தை உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள சகல தரப்பினரும் வழங்கவேண்டும்' எனவும் அவர் வலியுறுத்தினார்.

## நீதிக்கான....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமாரசுவாமி கொலை வழக்கு நூல் அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிருஷாந்தி குமாரசுவாமி கொலை செம்மணி என்ற பெரும் புதைகுழியைத் திறந்துவிட்டது சோமரத்ன ராஜபக்ச தனது வாக்குமூலத்தின்போது 'நான் மாத்திரம் இதில் தொடர்புபட்டிருக்கவில்லை, ஜெனரல்கள் தர அதிகாரிகள்கூட இதில் தொடர்புபட்டிருக்கின்றனர், அவர்கள் வழங்கும் உடல்களை நாங்கள் செம்மணியில் புதைப்போம்' எனத் தெரிவித்திருந்தார்.

செம்மணிப் புதைகுழிகளில் 500க்கும் மேற்பட்ட உடல்கள் புதைக்கப்பட்டன என அவர் வாக்குமூலம் வழங்கியதைத் தொடர்ந்து இடம்பெற்ற அகழ்வுகளின்போது 1999இல் 15 உடல்களை மீட்டார்கள். ஆனால் தொடர்ந்து உடல்களை அகழ்வதை ஏதோ ஒரு காரணத்திற்காக நிறுத்திவிட்டார்கள், அரசியல் அழுத்தம் என்றார்கள்.

எனினும் இந்த விவகாரம் மீண்டும் சூடு பிடித்திருக்கின்றது. சித்துப்பாத்தி இந்துக்களின் மயானம். அங்கு உடல்கள் புதைக்கப்படுவது இல்லை, அங்கு உடல்கள் எரிக்கப்படுகின்றன. அது ஒரு சுடுகாடு. தற்போது செம்மணி மனிதப் புதைகுழியில் 500க்கும் மேற்பட்ட உடல்கள் இருக்கலாம் என அனுமானிக்கப்படுகின்றது.

மேலும் பல பகுதிகளில் உடல்கள் புதைக்கப் பட்டிருக்கலாம் என்பது தெரியவந்துள்து. இவை சாதாரண புதைகுழிகள் இல்லை, பெரியளவில் மக்கள் கொன்று புதைக்கப்பட்ட புதைகுழிகள்.

இதனைச்செய்தவர்கள் அக்காலப்பகுதியில் சட்டத்திற்கு மேற்பட்டவர்களாக விளங்கியுள்ளனர். தங்களைச் சட்டத்திற்கு மேற்பட்டவர்களாகக் கருதியுள்ளனர். சட்டத்தைப்பற்றிக்கவலைப்படாதவர்களாகவே காணப்பட்டுள்ளனர்.

1995ம் ஆண்டின் பின்னர் யாழ். குடாநாட்டிலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் முற்றாக வெளியேற்றப்பட்ட பின்னரே இது இடம்பெற்றுள்ளது. 1995 முதல் 2009 வரை இராணுவத்தினர் கேட்டுக்கேள்வி இல்லாதவர்கள் போல செயற்பட்டனர்.

யாழ். குடாநாட்டை முழுமையாகத் தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்தனர். சட்டத்திற்கு மேற்பட்ட அதிகாரங்கள் அவர்களிற்குக் காணப்பட்டன. அவர்கள் சட்டத்திற்குப் பயப்படாதவர்களாகத்தான் தோன்றித்தனமாகச் செயற்படுபவர்களாக காணப்பட்டனர். செம்மணிக் கொலைகளை இராணுவத்தினரே செய்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன.

புதிய ஆளும்தரப்பு காரணமாகவே செம்மணி மனித புதைகுழி அகழ்வு சாத்தியமானது எனச் சிலர் தெரிவிக்கின்றனர். காலம்தான் இதற்கு பதில்சொல்லவேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வோர்க்கர் டேர்க்கர் இலங்கைக்கு வருகை தருகிறார் எனத் தகவல் வெளியானதும் அவர் கட்டாயம் செம்மணி மனித புதைகுழி காணப்படும் பகுதியை சென்று பார்க்கவேண்டும், நேரடியாக சென்று பார்க்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

இது முக்கியமான விடயம் அவர் செம்மணிக்குச் செல்வது குறியீட்டு முக்கியத்துவம் வாய்ந்தது.

அவர் கட்டாயம் செம்மணிக்குச் சென்று பார்க்கவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுத்தோம். இலங்கை வெளிவிவகார அமைச்சும் இதற்கு சாதகமான பதிலை வழங்கியிருந்தது. எனினும் பின்னர் திடீர் என செம்மணி புதைகுழி நீதவான் நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதால் மனித உரிமை ஆணையாளர் அங்கு செல்வதற்கு நீதிமன்றி அனுமதி அவசியம் என தெரிவித்தார்கள். அந்த காலப்பகுதியில் அகழ்வுகள் நிறுத்தப்பட்டிருந்ததால் நீதிமன்ற அனுமதி அவசியம் என்றார்கள்.

அனுமதி பெறும் விடயத்தை காணாமல்போனோர் அலுவலகம் செய்யும் என்றார்கள் எனினும் பின்னர் திடீர் என சட்டமா அதிபர் திணைக்களம் கையாளும் என்றார்கள்.

சட்டமா அதிபர் திணைக்களம் என்றால் இனி ஒன்றும் நடக்காது என்பது எங்களிற்கு தெரியும். அதன் காரணமாக நாங்கள் உடனடியாக நீதிவான் நீதிமன்றத்தை நாடி அனுமதியைக் கோரினோம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நேரடியாகச் செம்மணிக்குச் சென்று பார்வையிடுவதற்கான அனுமதியை வழங்குமாறு கோரினோம்.

நீதிமன்றத்தில் ஆளும்தரப்ப பிரதிநிதித்துவப்படுத்தி ஆஜராகியிருந்த பொலிஸ் அதிகாரியொருவர் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் மயானத்தின் கேட்டிற்கு வெளியே தான் நிற்கலாம் அவருக்கு உள்ளே செல்வதற்கு அனுமதி வழங்க முடியாது எனத் தெரிவித்தார். எனினும் நாங்கள் இது மிகமுக்கிய - சர்வதேச இராஜதந்திரியை அவமதிக்கும் செயலாக அமையும், இலங்கை ஆள்ம்தரப்புடனான உடன்பாட்டின் அடிப்படையிலேயே வோல்க்கெர் டேர்க் செம்மணிக்கு வருகின்றார் எனச் சுட்டிக்காட்டினோம்.

அதனைத் தொடர்ந்து நீதிவான் அதற்கான அனுமதியை வழங்கினார்.

நாடாளுமன்றத்தில் ஒன்றைச் சொல்கின்றார்கள் வெளியே வேறொன்றை செய்கின்றார்கள். கடந்தகால ஆளும்தரப்புக்கள் எப்படிச் செயற்பட்டனவோ அதேபோன்றே இந்த ஆளும்தரப்பும் செயற்படுகின்றது.

செம்மணிப் புதைகுழியைத் தோண்டுவதற்கான நிதிக்கு அனுமதியை பெறுவது மிகவும் கடினமான விடயமாக உள்ளது.

இது மனிதபடுகொலை, போர்க குற்றம் இடம்பெற்ற இடம், ஒரு அடி தோண்டிய உடனேயே உடல்கள் வெளிவருகின்றன. சம்பிரதாயபூர்வமாக அவை புதைக்கப்படவில்லை.

இந்த உடல்கள் ஆடைகள் அற்ற விதத்தில் மரியாதைக் குறைவான விதத்தில் புதைக்கப்பட்டுள்ளன. சிறுவர்களின் உடல்கள் காணப்படுகின்றன.

இது போரில் கொலையுண்டவர்கள் தொடர்பான புதைகுழியில்லை

எங்கள் சரித்திரத்தில், தமிழர்களின் விடயங்களை நீதிமன்றம் மிகவும் குறைவான - வரையறுக்கப்பட்ட விதத்திலேயே அணுகியிருக்கின்றது.

எங்கள் மக்களிற்கு நீதிமன்றக் கட்டமைப்பில் நம்பிக்கையில்லை, பாதிக்கப்பட்ட மக்கள் காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் சர்வதேச விசாரணைகளையே எதிர்பார்க்கின்றனர் நம்புகின்றனர். உள்நாட்டு பொறிமுறையை அவர்கள் நம்புவதற்கான எந்தத் தடயமும் இல்லை.

சில அரசியல்வாதிகள் கூறுவதற்கு மாறாக எங்களிற்கு வேறு சாத்தியப்பாடுகளும் உள்ளன. வேறு பல நாடுகளில் தற்காலிக தீர்ப்பாயங்களை நிறுவியுள்ளனர். அதற்காக அவர்கள் சர்வதேசச் சட்டங்களை உருவாக்கியுள்ளனர் - என்றார்.

## சர்வதேச....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சடலங்களை கப்டன் லலித் ஹேவாகேயின் ஆணைக்கு அமைய புதைத்ததைத் தவிர வேறேந்தக் குற்றத்தையும் தனது கணவர் புரியவில்லை என்றும் அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்தகால ஆளும்தரப்புக்கள் இராணுவ உயர் அதிகாரிகளைப் பாதுகாத்துக்கொண்டு,

தொடர்ச்சி 3 ம் பக்கம்.....

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீழ்மட்ட வீரர்களைத் தண்டிப்பதன் ஊடாக, குற்றமிழைத்த இராணுவத்தினரைத் தாம் தண்டித்திருப்பதாக சர்வதேச சமூகத்துக்குக் கூறி வந்தன என்றும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

செம்மணி சோதனைச் சாவடியானது அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்துக்குள் உள்நுழையும்பிரதானசோதனைச்சாவடியாக இருந்தது. அந்தச் சோதனைச் சாவடியில் பணியாற்றிய எனது கணவர் உள்ளடங்கலாக ஏனைய ஐந்து இராணுவத்தினருக்கு மேலதிகமாக கப்டன் லலித் ஹேவாகேயின் ஆலோசனைக்கு அமைவாக நாளாந்தம் இந்த சோதனைச் சாவடிக்கு வருகைதரும் லெப்டினன்ட் துடுகல, லெப்டினன்ட் உதயகுமார, மொழிபெயர்ப்பாளரான பொலிஸ் பரிசோதகர் சமரசிங்க, பொலிஸ் பரிசோதகர் நஸார் ஆகியோரால் அங்கு அழைத்துவரப்படும் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினரால் அடையாளம் காண்பிக்கப்படும் வீதியில் செல்லும்சந்தேகநபர்கள்செம்மணிசோதனைச் சாவடியில் கைது செய்யப்படுவர்.

அவர்கள் மாலை 4.00 மணியின் பின்னர் ட்ரக் வாகனத்தில் ஏற்றப்பட்டு 7ஆவது காலணி இராணுவப் படை தலைமையகத்துக்குக் கொண்டுசெல்லப்படுவர். அங்கு இறப்போரின் உடல்கள் இரவு வேளையில் மீண்டும் செம்மணி சோதனைச் சாவடிக்குக் கொண்டுவரப்படும். அவற்றைப்புதைக்குமாறு எனது கணவர் உள்ளிட்ட தரப்பினருக்கு உத்தரவிட்டுவிட்டு, வந்தவர்கள் மீண்டும் திரும்பிச் செல்வார்கள் என்றே எனது கணவர் கூறியிருக்கின்றார். செம்மணி சோதனைச் சாவடியில் இவ்வாறான நடவடிக்கைகள் சுமார் ஒரு வருடகாலமாக இடம்பெற்றிருக்கின்றன.

கிருஷாந்தி குமாரசுவாமி உள்ளடங்கலாக அவரது குடும்பத்தினர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் மாத்திரம் வெளிவந்தமைக்கான காரணம் என்ன? செம்மணி சோதனைச்சாவடியில் இதுவரையில் சுமார் 300க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு, கொன்று புதைக்கப்பட்டுள்ளனர். அவ்வாறிருக்கையில்கிருஷாந்திகுமாரசுவாமி குடும்பத்தின் படுகொலை மாத்திரம் வெளியே வந்தமைக்கு இதுவே காரணமாகும்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் சகோதரியான சுனேத்ரா பண்டாரநாயக்கவின் கணவர் சர்வதேச மனித உரிமைகள் செயல்பாட்டாளரான குமார் ரூபசிங்க ஆவார். குமார் ரூபசிங்க கிருஷாந்தி குமாரசுவாமி குடும்பத்தின் உறவினர் என்பதனால், அவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் முன்வைத்த வேண்டுகோளுக்கு இணங்க கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை விவகாரம் தொடர்பில் மாத்திரம் கவனம் செலுத்தப்பட்டு, செம்மணி சோதனைச் சாவடியில் பணியாற்றிய எனது கணவர் உள்ளிட்ட இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

கிருஷாந்தி குமாரசுவாமி உள்ளடங்கலாக அவரது குடும்பத்தினரும் மேலே குறிப்பிட்ட முறைமையில் கப்டன் லலித் ஹேவாகே குழுவினராலேயே கைது செய்யப்பட்டனர். செம்மணி சோதனைச்சாவடியில் இறுதியாகக் கைது செய்யப்பட்ட கிருஷாந்தி குமாரசுவாமி உள்ளிட்ட அவரது குடும்பத்தினர், கைதான அன்றைய தினம் மாலை 4.00 மணியின் பின்னர் 7ஆம் காலணி இராணுவப் படை தலைமையகத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு, இரண்டு தினங்களில் பின்னர் அவர்கள் கொல்லப்பட்டு, அவர்களின் உடல்கள் மீண்டும் செம்மணி சோதனைச் சாவடிக்குக் கொண்டுவரப்பட்டன.

அங்கு எனது கணவர் உள்ளடங்கலாக ஏனைய இராணுவத்தினரிடம் அவர்களது உடல்கள் ஒப்படைக்கப்பட்டதுடன், அவற்றைப் புதைக்குமாறு உத்தரவிட்ட கப்டன் லலித் ஹேவாகே, அங்கிருந்து வெளியேறினார்.

தண்டனை விதிக்கப்பட்டதன் பின்னர் எனது கணவரால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களுக்கு அமைவாக 1999ஆம் ஆண்டு கப்டன் லலித் ஹேவாகே, கப்டன் பெரேரா, லெப்டினன்ட் உதயகுமார, மொழிபெயர்ப்பாளர்களான பொலிஸ் பரிசோதகர் சமரசிங்க, பொலிஸ் பரிசோதகர் அப்துல் ஹமீட் நஸார், லெப்டினன் துடுகல ஆகிய அதிகாரிகள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். 6 மாதங்களில் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அந்த வழக்குக்கு என்ன நடந்தது என யாருக்கும் தெரியவில்லை.

இந்தச்சம்பவத்தின்பின்னர்எனதுகணவர் சார்பில் முன்னிலையாவதற்கு விருப்பம் தெரிவித்து, போகம்பறை சிறைச்சாலைக்கு வருகை தந்து அவரைச் சந்தித்த ஜனாதிபதி சட்டத்தரணி குமார் பொன்னம்பலம், எனது கணவரிடம் விடயங்களைக் கேட்டறிந்ததன் பின்னர் ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்று அவரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருந்தார். இருப்பினும் திடீரென குமார் பொன்னம்பலம் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்நிலையில் மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில் எனது கணவரால் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது. இருப்பினும் உயர்நீதி மன்றத்துக்கு அழுத்தம் பிரயோகித்து, எனது கணவர் உள்ளிட்ட தரப்பினருக்கு மீண்டும் கொலைத் தண்டனை விதிக்கச் செய்தவர் அப்போதைய ஜனாதிபதியாவார்.

செம்மணி சோதனைச் சாவடி குறித்த சகல தகவல்களையும் மேல்நீதிமன்றத்தில் வெளிப்படுத்தியமையே அதற்குக் காரணமாகும். அந்தப் பழிவாங்கல்கள் இன்றுவரை தொடர்கின்றன - என்றும் அவர் கூறியுள்ளார்.

## சர்வதேசத்திற்குச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொலைத் தண்டனைக் கைதியான சோமரத்ன ராஜபக்ச சர்வதேச விசாரணைக்கு தயார் என்று அவரது மனைவி அரசுத் தலைவருக்குக்கடிதம்அனுப்பிவைத்துள்ளார்.

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கின்பிரதானகுற்றவாளியானசோமரத்ன ராஜபக்சவின் மனைவியான விஜேவிக்கிரம அரசுத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கின்பிரதானகுற்றவாளியானசோமரத்ன ராஜபக்சவின் மனைவி அரசுத் தலைவர்க்கு எழுதியுள்ள கடிதம் தொடர்பான விரிவான செய்தியை பத்திரிகை ஒன்று நேற்று தனது முதற்பக்கத்தில் பிரசுரித்துள்ளது.

இந்தக் கடிதத்தில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கிருஷாந்தி படுகொலை வழக்கில் சோமரத்ன ராஜபக்ச உயர் நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டு அவருக்கு கொலைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. முறையான விசாரணைகளின் பிரகாரமே இவருக்கு கொலைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இராணுவத்தினர் குற்றம் புரிந்திருப்பார்களாயின் அவர்களுக்கு உள்ளக நீதிக் கட்டமைப்பின் கீழ் தண்டனை வழங்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். ஆனால், கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கின்பிரதானகுற்றவாளியானசோமரத்ன ராஜபக்சவுக்கு உயர்நீதிமன்றம் கொலைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. இவ்விவகாரத்தை அரசுத் தலைவர் ஆணைக்குழுநியமித்துவிசாரணைசெய்வது சிக்கல் நிலையை ஏற்படுத்தும்.

இந்த விவகாரத்தை சர்வதேச விசாரணைக்குகொண்டுசென்றுசாட்சியமளிக்க சோமரத்ன ராஜபக்ச தயாராகவுள்ளார் என்று அவரது மனைவி குறிப்பிட்டுள்ளார் என்று குறித்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வதேச விசாரணைக்குச் செல்வதற்கு முன்னர் உள்ளக நீதிக் கட்டமைப்பின் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறவுள்ள நிலையில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகிறது. சோமரத்ன ராஜபக்சவின் மனைவி அனுப்பி வைத்த கடிதம் தொடர்பில் அரசுத் தலைவர் எடுக்கும் நடவடிக்கைகள் என்னவென்பதை எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

## செம்மணியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இடம்பெற்ற அகழ்வின்போதும் புதிதாக நான்கு மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வின் 29ஆம் நாள் அகழ்வுப் பணி இன்று இடம்பெற்றது. இன்றைய அகழ்வின்போது நான்கு மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட மனித என்புத் தொகுதிகளில் 3 நேற்றுமுழுமையாகஅகழ்ந்துஎடுக்கப்பட்டன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 130 மனித என்புத் தொகுதிகள் அடையாளம்காணப்பட்டுசுத்தப்படுத்தப்பட்டு இலக்கமிடப்பட்டுள்ளன. மேலும் இதுவரை அடையாளம் காணப்பட்ட மனித என்புத் தொகுதிகளில் இருந்து 120 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார்நிபுணர்பேராசிரியர் ராஜ்சோமதேவாவின்தலைமையில்அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட மற்றும் கலைப்பீட தொல்லியல் துறை மாணவர்கள் ஆகியோர் இன்றைய அகழ்வுப் பணிகளின்போதுமுன்னிலையாகிஇருந்தனர்.

## நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் பிரதமர், அதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்தார். கந்தசுவாமி கோயிலில் தற்போது திருவிழா நடந்து வருவதால் பிரதமர் அங்கு சென்று வழிபாடு செய்தார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன், பவானந்தராஜா ஆகியோரும் பிரதமருடன் ஆலயத்திற்கு வருகைதந்திருந்தனர்.

## இனரீதியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டாது என்ற உறுதியான உத்தரவாதத்தை ஏற்கனவே ஆளும்தரப்பிடமிருந்து எழுத்து மூலமாகப் பெற்றுள்ளேன்.

இந்த விடயத்தை அரசியலாக்கவோ, இன உணர்வுகளைத் தூண்டி அரசியல் பயன் பெறவோ நான் விரும்பவில்லை. அதனாலேயே நான் இது பற்றி ஊடகங்களில் தெரிவித்து, எந்தவொரு விளம்பரத்தையும் பெற்றுக்கொள்ளவில்லை. தமிழ், முஸ்லிம் உறவைப் பாதுகாக்கும் பொறுப்புணர்வுடன் நான் செயற்படுகிறேன்.

முஸ்லிம் பெரும்பான்மையுள்ள பிரதேசங்களில் தமிழர்களுக்கும், தமிழ் பெரும்பான்மையுள்ள பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கும்எந்தஅநீதியும்நிகழக்கூடாது என்பதே எனது நிலைபாடு. காணி, நிதி ஒதுக்கீட்டுகள்மற்றும்நிர்வாகத்தீர்மானங்களில் ஏதேனும் சரிபார்க்கக் கூடிய முறைப்பாடுகள் இருந்தால், அதனை மாவட்ட மட்டத்தில் இரு சமூக பிரதிநிதிகளுடன் கலந்தாய்வு செய்யும் குழுவை அமைப்பது ஒரு கட்டமைக்கப்பட்ட வழியாக இருக்கலாம்.

கிராம சேவை பிரிவுகள் போன்ற நிர்வாக மாற்றங்களில் முன்பே சில அநீதிகள் நடந்ததாகக் குற்றச்சாட்டுகள் உள்ளன. இது போன்ற பிரச்சினைகள் சமூகத் தலைவர்களுடன் கலந்துரையாடல் மூலமே தீர்க்கப்படவேண்டும்.

இன அடிப்படையில் அரசியல் செய்வது எதிர்மறையான விளைவுகளையும் தமிழ் - முஸ்லிம் உறவுகளைப் பலவீனமாக்கும் அபாயத்தையும் ஏற்படுத்தும்.

கடந்த காலங்களில் இஸ்ரேல், மொசாட் போன்ற வெளிநாட்டு உளவுத்துறைகள் ஆளும்தரப்புக்களுக்கு வழங்கிய ஆலோசனைகளின் பின்னணியில் இன மோதல்களும் அதனை அடுத்து நடந்த கொடூர கொலைகளும் ஏற்படுத்திய கசப்பான அனுபவங்களை ஒருபோதும் மறங்க முடியாது என்றார்.

## புலம்பெயர்ந்தோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லத்தில் இருந்து மஹிந்த ராஜபக்சவை வெளிவேற்றினால் பெரும்பாலான மக்கள் உறுதிப்பத்திரத்துடன் அவருக்கு வீடுகளை வழங்குவார்கள். பழிவாங்கும் நோக்கில் சிறுப்பிள்ளைத்தனமாக செயற்படுவதை ஆளும்தரப்பு தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சர்வஜன சக்தியின் காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (03) நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

முன்னாள் அரசுத் தலைவர்களின் சிறப்புரிமைகளை இரத்துச்செய்யும்வகையில் சட்டமூலம் ஒன்று வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. முன்னாள் அரசுத் தலைவர்களான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, கோட்டபய ராஜபக்ச மற்றும் முன்னாள் அரசுத் தலைவர்யான ரணசிங்க பிரேமதாசவின் பாரியாரான ஹேமா பிரேமதாச ஆகியோர் இந்த சட்டத்தால் பாதிக்கப்படுவார்கள்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைமீட்ட முன்னாள் அரசுத்தலைவர்யான ரணில் விக்கிரமசிங்க முன்னாள் அரசுத் தலைவருக்குரிய எவ்வித சலுகைகளையும் பெற்றுக்கொள்ளவில்லை.

போரை முடிவுக்கு கொண்டு வந்த முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்சவை நெருக்கடிக்குக்குள்ளாக்க இந்த ஆளும்தரப்பு பல்வேறு வழிகளில் முயற்சிக்கிறது. பிரிவினைவாதக்கொள்கையை உடைய புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை திருப்திப்படுத்தவே மஹிந்த ராஜபக்சவை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில்தான் இந்த சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டவுடன் முன்னாள் அரசுத் தலைவர்கள் எவரும் வீதிக்கு வருவதில்லை. முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்சவை விஜேராம அரச இல்லத்தில் இருந்து வெளியேற்றினால் அவருக்கு பெரும்பாலான மக்கள் உறுதிப்பத்திரத்துடன் தமது வீடுகளைக் கையளிக்க தயாராகவுள்ளார்கள்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணசிங்க பிரேமதாச ஆடைக் கைத்தொழில்துறையை அறிமுகப்படுத்தியதால்தான் இன்றும் பல்லாயிரம் கணக்கான நடுத்தர குடும்பங்கள் வாழ்கின்றன. ஆகவே முன்னாள் அரசுத் தலைவர்களைப் பாதுகாப்பது ஆளும்தரப்பின் பொறுப்பல்ல அது தேசியத்தின் கடமை. பழிவாங்கும் நோக்கில் சிறுப்பிள்ளைத்தனமாக செயற்படுவதை ஆளும்தரப்பு தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்றார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சர்வதேச விசாரணையை ஏற்க வேண்டும்

செம்மணியில் தோண்டப்பட்ட மனிதப் புதைகுழிகள், இலங்கையின் பிந்தைய வரலாற்றில் இடம்பெற்ற மிக முக்கியமான மனித உரிமை மீறல்களை எடுத்துச் சொல்லும் சாட்சிகளாகத் திகழ்கின்றன. அந்தப் புதைகுழிகள் மூலமாக கடந்த யுத்த காலத்திலேயே அல்லாமல், அதற்குப் பிறகான கட்டத்திலும் மக்கள் திடீரென காணாமல் போனதும், அவர்களின் சடலங்கள் ஆழத்தில் புதைக்கப்பட்டதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான ஒரு நுட்பமான மற்றும் மனிதாபிமானக் கோணத்திலான விசாரணைக்கு முதல் நிலைத் தூண்டுதலாக, கிருஷாந்தி குமாரசுவாமி வழக்கில் தண்டிக்கப்பட்டிருந்த சோமரத்ன ராஜபக்ச வெளியிட்டுள்ள தகவல்கள் திகழ்கின்றன. அவர், தற்போது சிறையிலிருக்கும் நிலையிலும், தன் மனைவியின் மூலமாகவேனும், சாட்சியளிக்கத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார். இது, இந்த வழக்கு எவ்வளவு ஆழமானதையும், அந்தக் கால கட்டத்தில் இடம்பெற்றுள்ள யதார்த்தங்களை வெளிக்கொணரும் வாய்ப்பு இருப்பதையும் சுட்டிக்காட்டுகின்றது.

இந்த நிலையில் ஜனநாயக மக்கள் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் உள்ளிட்ட அரசியல்வாதிகள், சர்வதேச விசாரணை ஒன்றை ஏற்பதற்கான அழுத்தங்களை வழங்குவதும், தமிழ் மக்கள் நீண்ட காலமாகவும் தொடர்ச்சியாகவும் முன்வைத்து வரும் கோரிக்கைகளும் மிகுந்த நியாயமானவை. ஏனெனில், நாடு கடந்த 15 வருடங்களாக பல்வேறு உள்நாட்டுப் விசாரணைகள், ஆணைக்குழுக்கள், மற்றும் பரிந்துரைகளை அறிவித்தாலும், உண்மையான நீதியும், நம்பிக்கையும் கிடைக்காத நிலையில்தான் இந்த கோரிக்கைகள் தொடருகின்றன.

உண்மையை கண்டறியும் முயற்சிகள் தனிப்பட்ட இனத்தின் உரிமைகளை மட்டுமல்லாது, ஒரு நாடாகிய இலங்கையின் மனித உரிமைப் போக்கையும், சர்வதேச சமூகத்தில் ஏற்படவேண்டிய நம்பிக்கையையும் உருவாக்கும். அதனால்தான், இதுபோன்ற விசாரணைகளுக்குத் தாமதமாகவோ, எதிர்மறையாகவோ பதிலளிப்பது, நாட்டின் மீதான சர்வதேச நம்பிக்கையை மேலும் சிதைக்கும் அபாயத்தை ஏற்படுத்தும்.

அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, தற்போது ஜனநாயக மாற்றத்தின் பெயரில் ஆட்சிக்குவரும் முதற்கட்டத்தில் இருக்கிறார். இவர் தனக்குப் பின்னால் நின்ற மக்களின் நம்பிக்கையை நிரூபிக்க வேண்டிய கடமையிலும் இருக்கிறார். அந்த நம்பிக்கையை நிலைநாட்டுவதற்கான முக்கியமான ஒரு முயற்சி தான், இந்தச் செம்மணிப் புதைகுழிகள் தொடர்பான சர்வதேச விசாரணையை அஞ்சாமல் ஏற்கும் முடிவாகும்.

இது, இங்கு வாழும் தமிழ் மக்களுக்கான நீதி முயற்சியை மட்டும் சார்ந்ததாக அல்ல. இது, எதனையும் மறைக்காது, உண்மையை உரைக்கும், நவீன ஜனநாயக இலங்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கையாகவும் பார்க்கப்படவேண்டும். அதிகாரத்தில் இருப்பவர்கள் தங்களது சிறப்பான நேரத்தில் நியாயமான முடிவுகளை எடுக்காதபட்சத்தில், வரலாறு அவர்களது மௌனத்தையே குற்றமாகக் குறிக்கத்துவங்கும்.

எனவே, தற்போது கையில் உள்ள சாட்சிகள், சோமரத்ன ராஜபக்ச வழங்கும் ஒத்துழைப்பு, மக்கள் விருப்பம், அரசியல் ஆதரவு, அனைத்தும் ஒன்று கூடும் இந்த நேரத்தில், சர்வதேச விசாரணையைத் தொடங்குவதற்கான வழிகளை ஏற்படுத்தி, அரசு, இவ்விவகாரத்தில் தன்னை நம்பத்தகுந்ததாக நிரூபிக்க வேண்டியுள்ளது.

நாடெங்கும் ஏற்பட்டுள்ள இந்த உணர்வு அலைக்கு அரசுத் தலைவர் பதிலளிக்க வேண்டிய காலமிது. ஊடுருவும் உண்மையையும், நீதியின் தேடலையும் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் அதனுடன் இணைந்து செயல்பட முடியும். அப்போதுதான், நாடும், அதன் வரலாறும், இனங்களும், ஒருமித்த நம்பிக்கையுடன் எதிர்காலத்தை நோக்கி நகர முடியும்.

## வெளிநாட்டு சுற்றுலாவிகளுக்கு தற்காலிக சாரதிப் பத்திரங்கள்

இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், அவர்களின் சாரதி அனுமதி பத்திரம் மற்றும் விசா காலத்தின் அடிப்படையில், 5 நிமிடங்களுக்குள் செல்லுபடியாகும் சாரதி அனுமதி பத்திரத்தைப் பெற உதவும் மோட்டார் போக்குவரத்துத் துறையின் புதிய கிளை அலுவலகம், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவினால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மோட்டார் போக்குவரத்து ஆணையர் ஜெனரல் கமல் அமரசிங்க, விமானப் போக்குவரத்து சேவைகள் லிமிடெட் தலைவர் (ஓய்வு) ஹர்ஷா அபேவிக்ரம, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து ஆணையத்தின் (ஸ்ரீபுபுறீ) தலைவர் சுனில் ஜெயரத்ன மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்க நிகழ்வில் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தங்கள் விண்ணப்பங்களை இந்த அலுவலகங்களில் மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கலாம், இந்தத் திட்டம் பத்திரங்களை வழங்குவதற்கான நேரத்தை மேலும் குறைக்கும்.

சில மாதங்களில், காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவின் அதிகாரிகளுக்கு கையடக்கத் தொலைபேசி வழங்கப்படும் என்றும், பின்னர் இந்த அலுவலகங்கள் வெளிநாட்டுசுற்றுலாப்பயணிகளுக்குகியூஆர் (ஞயூ) குறியீட்டை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முன்னர், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கான செல்லுபடியாகும் சாரதி அனுமதி பத்திரத்தை பெறுவதற்கு வேரஹெறாவில் உள்ள மோட்டார் வாகனத் திணைக்களத்தின் சாரதி உரிமக் கிளைக்குச் செல்ல வேண்டியிருந்தது , இதற்காக அவர்கள் தங்கள் பயண நேரத்திலிருந்து சில நாட்களை ஒதுக்க வேண்டியிருந்தது என மேலும் தெரிவித்தார்.

## தேசபந்துவைப் பதவி நீக்குவதற்கான பிரேரணை மீது நாளை விவாதம்

கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைப் பதவி நீக்குவதற்கான பிரேரணை மீதான விவாதம், 2002ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் பிரகாரம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

ஜூலை 5 மு.ப. 11.30 மணி முதல் பி.ப 4.00 மணிவரை விவாதம் நடைபெறவுள்ளது. தீர்மானத்தின் மீது பி.ப 4.00 மணிக்கு இதற்கான வாக்கெடுப்பும் நடத்தப்படவுள்ளது.

தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்குவதற்காக ஆளும் தரப்பினரால் கொண்டு வரப்பட்ட யோசனை கடந்த பெப்ரவரி மாதம் நிறைவேற்றப்பட்டது. குறித்த யோசனையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்து விதப்புரைகளை முன்வைப்பதற்கு சபாநாயகர் ஜகத் விக்கரமரத்ன 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் நடவடிக்கை முறைச் சட்டத்தின் பிரகாரம் தற்போதைய பிரதம நீதியரசர் சூரசேன தலைமையில் சிறப்பு குழுவொன்றை நியமித்தார்.

நீதியரசர் இத்தவெல, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் லலித் ஏக்கநாயக்க ஆகியோர் இந்த குழுவில் இணை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். இந்தக் குழு சுமார் ஒன்றரை மாத காலமாகக் கூடியது. குழுவின் விசாரணைக்கு பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் முன்னிலையாகியிருந்தார்.

முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களில் 2023.12.31 ஆம் திகதியன்று மாத்தறை வெலிகம டப்ள்யூ 15 ஹோட்டல் மீது நடாத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பில் குழுவின் முன்னிலையில் 30 பேர் சாட்சியமளித்திருந்தனர்.

சிறப்புக்குழு இறுதி விதப்புரை அறிக்கையை சபாநாயகரிடம் கையளித்திருந்த நிலையில் அறிக்கையின் சாரம்சத்தை சபாநாயகர் கடந்த மாதம் 22 ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்தார். சிறப்புக்குழுவின் விதப்புரையில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் குற்றவாளி என்று ஏகமனதாக அறிவிக்கப்பட்டு, அவரை பதவியில் இருந்து நீக்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாகவே நாளை தினம் முதல்கட்ட விவாதம் நடைபெறவுள்ளது.

## வவுனியா நேரிய குளத்தில் 728 துப்பாக்கி ரவைகள் மீட்பு

வவுனியா, நேரியகுளம் பகுதியில் வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 728 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளதுடன் மேலும் இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 21 ஆம் திகதி கொழும்பில் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்ட முன்னாள் போராளி வழங்கிய தகவலின் அடிப்படையில் கொழும்பில் இருந்து வருகை தந்த புலனாய்வுத்துறை அதிகாரிகளோடு வவுனியா மாவட்ட குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவு பொலிஸாரும் இணைந்து செட்டிகுளம், துட்டுவாகை மற்றும் நேரியகுளம் பகுதிகளில் உள்ள இரு வீடுகளில் சோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது, நேரியகுளத்தில் வீடு ஒன்றின் அருகாமையில் பிளாஸ்டிக் பரல் ஒன்றினுள் 86 கைக்குண்டுகள் ரி - 56 ரக துப்பாக்கிக்கான ரவைகள், கைத்துப்பாக்கிக்கான மூன்று ரவைகள், 5 ஆயிரத்து 600 போதை மாத்திரைகள், 10 கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன நிலத்தின் கீழ் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் செட்டிகுளம், நேரியகுளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 728 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டதுடன், செட்டிகுளம் பிரதேச சபை உறுப்பினரின் சகோதரர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாத்தறை துப்பாக்கிச் சூட்டில் வரத்தகர் ஒருவர் நேற்று காயம்

மாத்தறை கபுகம பிரதேசத்தில் நேற்று காலை மோட்டார் சைக்கிள் ஒன்றில் வருகை தந்த அடையாளம் தெரியாத இருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வர்த்தகர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இதனிடையே இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 76 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன் இதன்போது 41 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 43 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கந்தர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கபுகம பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்த நபர் ஒருவரை இலக்கு வைத்து நேற்று காலை 6.30 மணியளவில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வருகை தந்த அடையாளம் தெரியாத இருவர் இந்தத்துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த வீட்டின் உரிமையாளரான 48 வயதுடைய வர்த்தகர் ஒருவரை இலக்கு வைத்தே இந்தத்துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதன்போது அவர் சிறுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிப்பிரயோகத்துக்கு ரி-56 ரக துப்பாக்கி ஒன்றே பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் சம்பவ இடத்திலிருந்து பல தோட்டா ரவைகளும் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த நபர் வர்த்தகர் ஒருவர் எனவும் அவருக்கு சொந்தமான பல தனியார் பஸ்கள் மற்றும் மீன்பிடி படகுகளும் உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மார்ச் மாதம் 21 ஆம் திகதி தேவேந்திர முனை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் கொலை செய்யப்பட்ட இரு இளைஞர்களுடன் குறித்த வர்த்தகருக்கு தொடர்புகள் இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதற்கமைய இந்த துப்பாக் கிப்பிரயோகம் திட்டமிட்டக்குற்றச்செயல்களுடன் தொடர்புடையதாக கூறப்படும் தேவேந்திரமுனை ''தெஹிபாகே மல்லி''யின் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்ய கந்தர பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதனிடையேஹுங்கமபொலிஸ்பிரிவுக்குட்பட்ட பிட்டனியாய பிங்கம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் 32 வயதுடைய நபர் உயிரிழந்திருந்தார்.எவ்வாறாயினும் குறித்த துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்ட நபர் ஹுங்கம பொலிஸில் துப்பாக்கியுடன் சரணடைந்ததையடுத்து அவரை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

41 வயதுடைய பிங்கம பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே சம்பவத்தின் போது கைது செய்யப்பட்டிருந்தார்.தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத்துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 76 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது 41 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 43 காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# திருகோணமலையில் குழு மோதலில் இளைஞர் கத்தியால் குத்திக் கொலை

திருகோணமலை, அலஸ்தோட்டம் பகுதியில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் இளைஞர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

திருகோணமலை, மடத்தடி - கிருஷ்ணர் ஒழுங்கையைச் சேர்ந்த வினோத் (வயது 33) என்ற இளைஞரே கொலை செய்யப்பட்டுள்ளார் என்று திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உள்ள சுற்றுலா விடுதியில் நேற்று நடைபெற்ற விருந்தில் கலந்துகொண்டுவிட்டு அங்கிருந்து வெளியேறியவேளை ஏற்பட்ட கருத்து மோதலே இந்தக் கொலைக்குக் காரணம் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இந்தக் கொலை தொடர்பாக 6 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.இறந்தஇளைஞருக்கும் தாக்குதல் நடத்தியவர்களுக்கும் இடையிலான பழைய தகராறுளும் இருந்துள்ளன என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கத்தியால் குத்துப்பட்டு இறந்தவரின் தலையில் கல்லால்தாக்கப்பட்ட காயமும் காணப்படுகின்றது. திருகோணமலை பொலிஸ் பிரிவு பதில் உதவி அத்தியட்சகர் சந்தனபஸ்நாயக்க தலைமையிலான தலைமையகப் பொலிஸார், இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொலையுடன் தொடர்புடைய மற்றொரு சந்தேகநபர் பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றார்.









காலைக்கதிர் Kalaikkathir

# பல்கலை மாணவர் போராட்டங்களுக்கு எந்த வகை தடையும் ஏற்படுத்தப்படாது

## பிரதமர் ஹரினி வவுனியாவில் உறுதிமொழி

பல்கலைக்கழகமாணவர்களின்ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்கள் மற்றும் மாணவர் அரசியலுக்கு எந்தவகையிலும்தடை ஏற்படுத்தப்பட மாட்டாது. ஆனால் வன்முறை மற்றும் பகிடிவதைக்கு எந்த வகையிலும் மன்னிப்பு வழங்கப்பட மாட்டாத என கல்வி உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

வவுனியா பல்கலைக்கழகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நூலகக் கட்டிடத்தைத் நேற்றுமுன்ஸ்ரீதனம் திறந்து வைத்ததைத் தொடர்ந்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நிர்வாக அதிகாரிகள் மற்றும் மாணவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார். நினைவுப் பலகையை திரைநீக்கம்செய்து புதிய நூலகத்தைத் திறந்து வைத்த பிரதமர் புதிய நூலக வளாகத்தையும் பார்வையிட்டார். பின்னர் பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

பிரதமர் கலாநிதி ஹரிணி அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கல்வித் துறையில் அளவுசார்ந்த வளர்ச்சியை ஏற்படுத்துவதை விட உலகை எதிர்கொள்ளக்கூடிய மாணவர்களை உருவாக்கும் தரமான கல்வியை வழங்கும் இடங்களாக பல்கலைக்கழகங்களை நிறுவுவதே அரசாங்கத்தின் எதிர்ப்பார்ப்பாகும். வெறுமனே இளமானி பட்டதாரிகளை உருவாக்கும் பணிக்கு அப்பால் நாட்டிற்கும் உலகிற்கும் பயனுள்ளதாகவும் உற்பத்தித் திறன் கொண்டதாகவும் இருக்கும் பட்டப்பின்படிப்புகள் மற்றும் ஆராய்ச்சிகள் நடத்தப்படும்இடங்களாகபல்கலைக்கழகங்களை மாற்றுவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பமாகும்.

எமது பல்கலைக்கழக முறைமை அண்மைக் காலமாக விரிவடைந்துள்ளது. ஆனால் அதன் தரத்தில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. எமது பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்கள் உலகை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

எதிர்வரும் சில ஆண்டுகளில் பல்கலைக்கழகக் கல்வியின் தரம் சர்வதேச மட்டத்தில் இருப்பதை உறுதிசெய்து பல்கலைக்கழகங்களை பட்டப்பின்படிப்பு ஆசிரியர் பயிற்சி பல்கலைக்கழகங்களாகவும் ஆராய்ச்சியில் சிறந்து விளங்கும் மையங்களாகவும் மாற்றுவது அவசியம். பல்கலைக்கழகங்கள் தாங்கள் உருவாக்கும் பட்டதாரிகள் விடயத்தில் திருப்தி அடைய முடியாது என்பதை இந்த அவையில் உள்ள பலர் ஒப்புக்கொள்வார்கள்.

பல்கலைக்கழகத்தில் சேரும் புதிய மாணவர்களுக்கு இருக்க வேண்டிய தரம் மற்றும் அடிப்படை திறன்கள் இல்லை. பாடசாலைக் கல்வி மூலம் செய்ய வேண்டிய பணிகள் முறையாகச்செய்யப்படாததால்பாடசாலையில் கற்றுக்கொள்ள வேண்டியவற்றைப் பல்கலைக்கழகத்தில் கற்பிக்க வேண்டியுள்ளது.

இந்த நிலைமை இந்த நாட்டின் உயர்கல்வி முறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒரு பிள்ளை பாடசாலையை விட்டு வெளியேறும்போது அவர்கள் தொழில் உலகிற்கு அல்லது உயர்கல்விக்கு தயாராக இருப்பதை உறுதி செய்ய நாம் மறந்துவிடக் கூடாது.

புதிய கல்வி சீர்திருத்தங்கள் மூலம் அந்த நிலையை மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் ஒரு பல்கலைக்கழக மாணவர் சமூகமாக அவர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பதற்கும் போராட்டம் நடத்துவதற்கும் மாணவர் அரசியலை மேற்கொள்வதற்கும் நாங்கள் எந்தத் தடையையும் ஏற்படுத்தப்போவதில்லை.

ஆனால் பல்கலைக்கழகங்களில் எந்தவிதமான வன்முறை பகிடிவதை அல்லது அமைதியான மாணவர் சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் எதற்கும் நாங்கள் இடமளிக்கப் போவதில்லை. இதுபோன்ற விடயங்களை மன்னிக்க நாங்கள் தயாராக இல்லைபல்கலைக்கழக மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதற்குத் தேவையான வசதிகளை வழங்க வேண்டும்என்றகொள்கைமுடிவில்ஆளும்தரப்பு இருப்பதாகவும் அந்த நோக்கத்திற்காக அது செயற்பட்டு வருகிறோம் என்றார்.










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.08.2025இல் வெளியிடப்பெற்றது